நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No.649/2024

## P.W.2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஸ்ருதிகா |
| தந்தை / கணவர் பெயர் | : | குப்புசாமி |
| கிராமம் | : | ஊமைமாரியம்மன் கோவில் தெரு |
| வட்டம் | : | ஓமலூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW2 |
| வயது | : | 23 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 29–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு மனுவின் பேரில் குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.25 PM

1. நான் இளங்கலை இயற்பியல் படிப்பு முடித்துவிட்டு அதன்பிறகு MCA படித்து வருகிறேன். நான் ஏற்கனவே முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறுதான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். இந்த வழக்கின் எதிரிகள் எனது

மாமா மற்றும் மாமாவின் மகன் என்றால் சரிதான். நானும், எனது அம்மாவும் தான் சம்பவதன்று எதிரிகளின் வீட்டிற்கு சென்றோம் என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு நாங்கள் போன் செய்து சொல்லிதான் போலீசார் வந்தார்கள்.

2. சம்பவயிடத்திற்கு நாங்கள் மாலை 04.30 மணிக்கு சென்றோம். மாலை 05.30 மணி சுமாருக்கு தகராறு நடந்துக்கொண்டிருக்கும்போது காவல் நிலையத்திற்கு எனது அம்மா போன் செய்தார். அதன் பிறகுதான் போலீசார் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். போலீசார் சம்பவயிடத்திற்கு வந்தபிறகு பிரச்சனை எதுவும் நடக்கவில்லை. சம்பவயிடத்தில் வைத்து புகார் எதுவும் நாங்கள் கொடுக்கவில்லை. ஆனால் கெட்டகெட்ட வார்த்தைகளால் எதிரிகள் திட்டிக்கொண்டிருந்தார்கள்.

3. பணம் கொடுத்தால் சென்றுவிடலாம் என்றுதான் நாங்கள் தாக்கப்பட்ட பிறகு சம்பவயிடத்தில் இருந்தோம். நான் தனிப்பட்ட முறையில் காவல் நிலையத்தில் இந்த சம்பவம் தொடர்பாக புகார் அளிக்கவில்லை. இந்த சம்பவம் சம்மந்தமாக போலீசார் என்னை ஓமலூர் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். 09 ம் தேதி சம்பவம் நடைபெற்றது. 10 ம் தேதி காலை 10.00 மணி சுமாருக்கு என்னை போலீசார் விசாரித்தார்கள். அதன் பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

4. இதற்கு முன்பாக எனது அம்மா எனது மாமாவின் மீது 2-3 புகார்கள் கொடுத்துள்ளார் என்றால் சரியாக நியாபகம் இல்லை. இந்த சம்பவத்திற்கு முன்பாகவே எனது மாமாவிற்கும், அம்மாவிற்கும் பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றாலும், எனது மாமாவிடம் பணம் கேட்கவேண்டும் என்ற எண்ணத்தில் எனது அம்மா பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றாலும், அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. சம்பவதன்று எனது அம்மாதான் எனது மாமாவை தாக்கி கடித்துவிட்டார் என்றால் அவர்களுக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. எங்களுக்கு அடிப்பட்டது மட்டும்தான் தெரியும். மேற்படி எனது மாமா புகார் அளித்து எங்கள்

மீது வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு நானும், எனது அம்மாவும் ஸ்கூட்டி இருச்சக்கர வாகனத்தில் சென்றோம். நானும், எனது அம்மாவும் சென்றுதான் எனது மாமாவை அடித்தோம் என்றால் சரியல்ல.

6. எனது மாமா போலீசாருக்கு போன் செய்து சொல்லிதான் அவர்கள் சம்பவயிடத்திற்கு வந்தார்கள் என்றாலும், போலீசார் 3 மணிநேரம் போராடிதான் எங்களை சம்பவயிடத்தில் இருந்து அகற்றினார்கள் என்றால் சரியல்ல. பேசித்தான் எங்களை அனுப்பி வைத்தார்கள். எனது பெரியப்பா சின்னதம்பி காரில்தான் எனது அம்மாவும், நானும் எனது வீட்டிற்கு திரும்பி வந்தோம். எனது அம்மாவுக்கு அடிப்பட்டதால் வண்டி ஓட்ட முடியவில்லை. வீட்டிறக்கு வந்தபிறகு மருத்துவமனைக்கு சென்றோம்.

7. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றாலும், நாங்கள் தான் எதிரிகள் தாக்கினோம் என்றாலும், இந்த வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டி பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(12.40PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**